# வேதாகமத்தின் செல்வாக்கு

*வேதாகமம் செல்வாக்கில் வல்லமையுள்ளதாயிருக்குமென்பதும், அப்படிப்பட்ட செல்வாக்கானது இணங்கச் செய்வதை (வெற்றி கொள்ளப்படுவதையல்ல) விளைவிக்கும் என்பதும் வேதாகமத்தின் பழைமையான முன்னுரைத்தல் ஆகும். திரளான எண்ணிக்கையுள்ள மக்கள் மனமாற்றப்பட வேண்டியிருந்த போதிலும், எண்ணிக்கையைக் கணக்கிடுவ தென்பது கிறிஸ்தவத்தின் நோக்கம் அல்ல. புதுப் பிறப்பின் ஜீவன்களைச் செயலாக்கும்படிக்கு ஒழுக்கம் மற்றும் ஆவிக்குரிய வகையில் மக்கள் மீது செல்வாக்கைச் செலுத்துவதே இதன் அடிப்படை நோக்கமாகும். கிறிஸ்தவமானது பரலோகத்தில் தொடக்கம் பெற்றது என்பதற்கு அதன் செல்வாக்கானது மிகவும் நம்பத்தக்க ஆதாரங்களைத் தருகின்றது.*

## மனிதரை நடத்தும் விதம்

*நல்ல சமாரியனின் உவமையில், அந்நியர்களும் அயலார்களும் கூட அன்பு காட்டப்பட்டு, உதவி செய்யப்பட வேண்டும் என்று இயேசு போதித்தார். இவ்விதமாக இயேசு, எல்லா மனிதர்களையும் சகோதரர்களாக ஏற்படுத்தி, எல்லா மனிதர்களும் மனிதத் தன்மையான முறையில் நடத்தப்பட வேண்டும் என்ற தமது சித்தத்தைப் பதிவு செய்தார்.*

***பிள்ளைகள்***

*இயேசு தம் ஊழியத்தில் மும்முரமாய் ஈடுபட்டிருந்த போதிலும், பிள்ளைகளைத் தம் கரங்களில் எடுத்துப் பற்றிக் கொள்வதற்கும் நேரத்தை ஒதுக்கினார். சிறுவர் சிறுமியரிடத்தில் அவரது செயல்கள் மற்றும் அவர்களைப் பற்றிய அவரது எண்ணப்போக்கு ஆகியவை நூறாயிரக் கணக்கான மக்களின் மேல் செயல் விளைவைப் பெற்றுள்ளது. கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டவர்கள் - மற்றும் பலரும் கூட - குழந்தையைப் புறக்கணிப்பதைக் கொடூரமானதென்றும் மனிதத் தன்மையற்ற செயல் என்றும் காணத் தொடங்கினார்கள். அவர்கள் இப்படிப்பட்ட நடைமுறைகளுக்கு எதிராகப் போதித்து, அவைகளை மாற்றுவதற்கு முயற்சி செய்தார்கள். பிறந்த குழந்தையாயிருத்தல் மற்றும் பிள்ளைப் பருவம் ஆகியவற்றைப் பரிசுத்தப் படுத்துவதற்காகவே இயேசு, வாழ்வின் அந்தப் பருவங்களை அநுபவத்தில் உணர்ந்தார் என்று போதிக்கப் பட்டுள்ளது. வாழ்க்கையின் மதிப்புள்ள தன்மை பற்றிய இயேசுவின்*

போதனையான புளித்த மாவானது பேரரசரின் மாளிகையில் தனது செல்வாக்கைச் செலுத்தியது; இருபது நூற்றாண்டுகளுக்குப் பிறகும் கூட அந்தப் புளித்த மாவானது இன்னமும் சக்தியுள்ளதாகவே இருக்கின்றது. கிறிஸ்தவரல்லாத நூறாயிரக்கணக்கான மக்களும் கூட குழந்தைகளைத் தவறாக நடத்துதல் என்ற சிந்தனையினால் கூட திகில் அடைகின்றார்கள்.

**பெண்கள்**

இயேசுவின் ஊழியத்தில் பெண்களும், கூட்டாளிகளாக இருந்தார்கள். அவர், பெண்களின் உதவியை ஏற்றுக் கொண்டு, அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்ததென்பது உலகத்தின் வரலாற்றில் மாபெரும் செயல் விளைவைப் பெற்றுத் தந்துள்ளது. பழங்காலத்தில் பெண்களின் நிலைமையானது அடிமையின் நிலையை விடச் சற்றுத்தான் மேலானாதாயிருந்தது. திருமணம் முடித்தால், அவள் கணவரின் உரிமைச் சொத்தாக இருந்தாள்; திருமணம் முடிக்காதிருந்தால், அவள் மனிதரின் விளையாட்டுப் பொருளாகவோ அல்லது அடிமையாகவோ இருந்தாளேயன்றி, ஒருபொழுதும் ஆணுக்குச் சமமானவளாக இருந்ததில்லை.

பெண்களைப் பற்றிய இறுமாப்புள்ள அவநம்பிக்கையானது மிக உயர்ந்த மனங்களில் கூட ஆதிக்கம் செலுத்தும் சக்தியாய் இருந்தது. சிசெரோவின் விரிவான எழுத்துக்களில் இருந்து, அவர் ஒரு தாயை உடையவராய் இருந்தாரா என்பதை ஒருவர் ஒருபொழுதும் அறிய மாட்டார் என்று கூறப்பட்டிருக்கின்றது. அகுஸ்துராயனின் காலத்தில் எழுதப்பட்டிருந்த வேறு எந்தப் புத்தகத்தைக் காட்டிலும் அதிகமாகப் புதிய ஏற்பாட்டில் பெண்களின் பெயர்கள் நிறையக் குறிப்பிடப்பட்டு, அவர்கள் மதிக்கப் பட்டிருக்கின்றார்கள். புறதெய்வ ஏமாற்றுவாதியும், விசுவாசத்திலிருந்து விலகிய பேரரசரான யூலியுவின் ஆசிரியருமான லிபேனியுஸ் என்பவர், அன்த்துஸா என்ற கிறிஸ்தவத் தாய் ஒருத்தியைக் கவனித்துப் பார்த்து, "இந்தக் கிறிஸ்தவர்கள் எப்படிப்பட்ட பெண்களைக் கொண்டிருக்கின்றார்கள்!" என்று ஆச்சரியப்பட்டார். இப்பொழுதோ, இலட்சக்கணக்கான மனிதர்கள், கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாதிருந்த போதிலும், பெண் இனத்தின் மதிப்பைப் பற்றிய, அவருடைய சில வகை போதனைகளை ஏற்றுக் கொள்ள முன் வந்திருக்கிறார்கள்.

**திருமணமும் இல்லமும்**

வேதாகமத்தின்மேல் பயபக்தியாய் இருக்கத் தவறியவர்களிடத்தில் திருமணத்தின் முக்கியத்துவமும் மற்றும் அதன் பரிசுத்த தன்மையும் எப்பொழுதுமே சிறிதளவே நினைத்துப் பார்க்கப்படுவதாய் உள்ளது. இல்லம் மற்றும் திருமணம் ஆகியவை ரோமர்களால் இழிவாகக் கருதப்பட்டன. குடும்பம் என்ற அலகின் வீழ்ச்சியானது நாட்டிற்கு அழிவை ஏற்படுத்தக் கூடியதென்று எண்ணிய அகுஸ்து இராயன், திருமணம் ஆகாதிருந்தவர்கள் மேல் தனிப்பட்டதொரு வரியைச் சுமத்துமளவுக்குத் திருமணமானது பெரும்பாலும் தவிர்க்கப்பட்டிருந்தது. திருமணம் செய்திருந்தவர்களிடையே கூட, ஒழுக்கம் என்பது - எந்த மக்களுக்கும்

மகிமையும் பலமுமாயிருப்பது - மிகவும் அரிதாகவே அறியப்பட்டிருந்தது. மற்றும் ஒரு எழுத்தாளர் கூறியபடி, “திருமணப் பிணைப்புகள் என்பவை கட்டவிழ்ப்பதற்கு மிகவும் சுலபமானவை என்று கருதப்படுமளவுக்கு மிகவும் மெத்தனமாய்க் கற்பனை செய்து கொள்ளப்பட்டன.” புறதெய்வ வணக்கம் கொண்டிருந்த ரோமர்களிடையே இருந்த விவாக முறிவுகளின் எண்ணிக்கை விகிதமானது, கிறிஸ்தவ நாடாகத் தொடக்கம் பெற்ற அமெரிக்க ஐக்கிய நாட்டின் விவாக முறிவுகளின் எண்ணிக்கை விகிதம் ஒன்றை நினைவூட்டுகின்றது. கிறிஸ்துவை மிகவும் விநயமாய்ப் பின்பற்றுவோர்களின் மத்தியில் கிறிஸ்தவத்தின் செல்வாக்கானது இல்லங்களை ஒன்று கூட்டிப் பற்றிக் கொள்ளுவதுடன், திருமண வாக்குறுதிகளின் பரிசுத்தத்தையும் பராமரிக்கின்றது.

**ஏழைகள் மற்றும் வியாதிப்பட்டவர்கள்**

கிரேக்க மற்றும் ரோமானியர்கள் ஆகியோரின் மதமோ அல்லது தத்துவமோ ஏழைகளுக்கு ஆறுதல் கூறுமளவு இளக்கமானதாய் இருந்ததில்லை. அவர்கள் ஆராதித்த தெய்வங்கள் கொடூரமானவைகளாகச் சித்தரிக்கப்பட்டன. புறதெய்வ நாடுகளில் தர்மப்பணி நிறுவனங்கள் என்பவை அறியப்படாதவைகளாயிருந்தன.

‘‘ஏழை மனிதன் ஒருவன் உன்னிடமிருந்து வெறுப்புடன் தள்ளப்படாதபடிக்கு உன்னை நீயே தாழ்த்திக் கொள்ள முடிவது எப்படி சாத்தியமாகும்?” என்பது ஒரு பணக்கார ரோமன் இன்னொரு பணக்கார ரோமனிடத்தில் கேட்கும் கேள்வியாய் இருந்தது. பிச்சைக்காரர்களின் கும்பல்கள் ரோமாபுரியில் அவ்வப்போது தர்மம் பெற்றார்கள், ஆனால் அந்தத் தர்மமானது வெறுப்புணர்வுடன் தரப்பட்டது. இதற்கு எதிரிடையாக, பிச்சைக்காரர்கள் மற்றும் துன்புற்றவர்கள் ஆகியோரில் தேவனுடைய சாயலை கிறிஸ்தவர்கள் கண்டார்கள், அவர்கள் உதவியற்றவர்களுக்கு உதவி செய்து புறதெய்வ வழிபாட்டாளர்களின் மதிப்பை வென்றார்கள். இந்த நிகழ் காலத்திலும் கூட, கடவுள் நம்பிக்கையற்றவர்கள் மனித உரிமைகளில் கிறிஸ்தவத்தின் செல்வாக்கைக் குறைத்தாலும் கூட, இந்த உரிமைகள் யாவும் கிறிஸ்தவத்துடன் கை கோர்த்துச் செல்லுகின்றன என்பதே உண்மையாகும். மற்ற மதங்களினால் ஆதிக்கம் பெற்றுள்ள நாடுகளில் இப்படிப்பட்ட சிலாக்கியங்கள் இருப்பதில்லை.

மற்றும் உணவின்றியிருந்தவர்கள்மேல் கிறிஸ்துவின் மனவுருக்கமானது தற்கால சமூகத்தில் பிரதிபலிக்கப் படுகின்றது. அவரது சீஷர்களானவர்களுக்கு மட்டுமின்றி கிறிஸ்தவர்களாகாத பல இலட்சக்கணக்கான மக்களுக்கும் இது உண்மையாகும். கிறிஸ்தவர்களாகாத திரளான கூட்டத்தாரும் கூட மனவுருக்கமான செயல்களினால் தங்கள் இருதயத்தை இணங்கப் பண்ணுவதற்கு வேதாகமத்தின் உபதேசங்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உதவுகின்றன.

***மற்றவரின் கேளிக்கைக்காக அரங்கில் போராட்டம்***

*பொழுதுபோக்கின் வக்கிரமான ஒரு உணர்வானது ரோமப் போர் வீரர்களின் போராட்டத்தினால் திருப்தி செய்யப்பட்டு வந்தது. மனித குலத்தில் இப்படிப்பட்ட கொடூரமான நிகழ்ச்சியை நிரந்தரமாக ஒழியச் செய்த பெருமையும் கூட கிறிஸ்தவத்தின் செல்வாக்கிற்குத் தரப்பட வேண்டியதாகும்.*

***அடிமைத்தனம்***

*கிறிஸ்துவின் காலத்தில் ரோமப் பேரரசில் அறுநூறு இலட்சம் சுயாதீனமுள்ள மக்களும், அறுநூறு இலட்சம் அடிமைகளும் இருந்தார்கள். அடிமைப்படுத்தப்பட்டிருந்த மனிதர்கள், நிலம் அல்லது கால்நடைகளைக் காட்டிலும் மதிப்புக் குறைந்தவர்களாகவே கருதப்பட்டார்கள். உழவு மாட்டைக் கொன்ற மனிதருக்கு மரண தண்டனை அளித்திருந்த ரோமானியச் சட்டமானது அடிமையைக் கொன்ற மனிதருக்கு அவ்விதத் தண்டனை எதையும் தந்திருக்கவில்லை. மக்களின் பொழுதுபோக்கிற்காக ஆம்பி தியேட்டர் என்ற அரங்க சாலையில் ஒருமுறை பத்தாயிரம் அடிமைகளைச் சண்டையிட்டுக் கொள்ளும்படி பேரரசர் ட்ரேஜன் நிர்ப்பந்தம் செய்தார்.*

*கிறிஸ்தவம் புரட்சியெதையும் பிரசங்கித்திருக்கவில்லை யென்றாலும், அது "பட்சபாதமற்ற நியாயத்தை, மற்றும் சுயத்தை மறுக்கும் அன்பை மற்றும் சகோதரத்துவ சமத்துவம் ஆகியவற்றை வலியுறுத்தியதன் மூலம் அடிமைத்தனத்தை வலுவற்றதாக்கியது." அகில உலக சகோதரத்துவம் பற்றிய மாபெரும் போதனையானது, அடிமைத்தனம் என்ற வெறுப்புக் குரிய குற்றத்தின் வேரில் வைக்கப்பட்ட கோடரிக்கு ஒப்பிடப் பட்டுள்ளது. நாகரிகமடைந்த ஒவ்வொரு நாட்டிலும் இப்பொழுது அடிமை எஜமானர்கள் என்பவர்கள் அறியப்படாமல் இருக்கின்றார்கள். (அடிமைத்தனமே இல்லை.)*

***போர்***

*கிறிஸ்தவத்தின் போதனையாகிய அகில உலக சகோதரத்துவத்தை எல்லா நாடுகளும் ஏற்றுக் கொண்டால், யுத்தங்கள்/போர்கள் என்பவை முற்றிலுமாக நீக்கப்பட்டு விடும். சகோதரத்துவ வாழ்க்கை வாழ மனிதகுலம் தவறியிருந்தாலும், கிறிஸ்தவம் பரப்பப்படும் இடங்களில் எல்லாம் போர் செய்யும் விருப்பம் இறந்து போகின்றது. கிறிஸ்துவுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்தவர்களால், வெற்றி கொள்ளும் யுத்தங்கள்/ போர்கள் தொடங்கப்படுவதில்லை. யுத்தத்தின்/போரின் பயங்கரங்களைக் குறைப்பதில் கிறிஸ்தவமானது மிகுந்த செல்வாக்குள்ளதாய் இருந்துள்ளது. கிறிஸ்தவர்கள் என்று தங்களை உரிமை கோரிக்கொள்பவர்களால் கைதிகளுக்கு அதிகம் மதிப்பளிக்கப்படுகின்றது, போரிடாத நாடுகளுக்கு பாதுகாப்பும் அளிக்கப்படுகின்றது. காயமடைந்த வீரர்களுக்குச் சிகிச்சையளித்துக் கவனித்துக் கொள்ளுதல் என்பது பழங்காலங்களில் கனவில் கூடக் கண்டிராத நடைமுறைகளாகும். இவ்விதமாக, இயேசுவின்*

மனிதப் பண்புள்ள தொடுதல் என்பது அவரது சமயத்தைப் பின்பற்றாதவர்களிடத்தில் கூட செயல் விளைவை ஏற்படுத்தியிருக்கின்றது.

சமாதானப் பிரபுவைப் பின்பற்றுபவர்கள் யுத்தங்களுக்கு/ போர்களுக்குக் காரணமாய் இருந்திருக்கின்றார்களே என்ற குற்றச்சாட்டிற்குப் பதில் அளிக்க, அவர்கள் அப்படிச் செய்ததில் தங்கள் தலைவரின் கொள்கைகளில் இருந்து விலகிச் சென்றுள்ளார்கள் என்று கூறுவதே போதுமானதாகும்.

## புறமத வழிபாடுகள் குறைந்து வருதல்

பேரரசர் கொடுமையான செயல்களைச் செய்தாலும் அவரை வணங்குவது என்ற நடைமுறையானது புறமத வழிபாட்டு மக்களிடையே வழக்கில் இருந்து வந்தது. இருப்பினும், அந்தக் கடவுள்கள் மனிதப் பேரரசர்களை விட ஒழுக்கத்தில் மேம்பட்டவர்கள் அல்ல. ஆகவே, புறமத வழிபாடுகள் என்பது ஒழுக்கக் கேட்டின் முழு வடிவம் ஆகும் என்று விவரிக்கப்பட்டதில் வியப்பெதுவும் இல்லை. புறமத வழிபாட்டுக்காரர்களில் திரளான கூட்டத்தார் கிறிஸ்தவத்திற்குத் திரும்பியபோது, அது இயல்பாகவே, புறமத வழிபாடுகள் குறைவதையும் கடவுளற்றவர்களின் ஆலயங்கள் அழிவதையும் ஏற்படுத்தியது.

## பொதுவான ஒழுக்கம்

வேதாகமத்தின் போதனைகளை எதிர்த்தவர்கள் பல ஆண்டுகளாக ஒழுக்கக் கேடுகளை போதித்து வந்தார்கள். அவர்கள் தாங்கள் போதித்தவைகளையே சீராக நடைமுறைப் படுத்திக் கொண்டிருந்தார்கள். “நாத்திகமானது துன்மார்க்கனை நல்ல மனிதனாக்காது” என்பதை ஒப்புக் கொண்டாக வேண்டும். இதற்கு மாறாக, கிறிஸ்தவத்திற்குத் தங்களை ஒப்புக் கொடுத்தவர்கள் குற்றங்களில் இருந்து சீராகத் திரும்பி, உயர்வான ஒழுக்க நடத்தையுள்ளவர்கள் ஆகின்றார்கள். வேதாகம அறிவுறுத்தலானது எவ்வித மாறுபாடும் இன்றி ஒழுக்கத் தரங்களை உயர்த்துகின்றது.

## உழைப்பின் மாண்பு

உடல் உழைப்பு என்பது மனிதர்களின் சுயமரியாதைத் தரத்திற்குக் கீழானதென்று ஒரு காலத்தில் கருதப்பட்டது. அது அடிமைகள் செய்யும் வேலையென்று கருதப்பட்டது. பிளேட்டோ மற்றும் அரிஸ்டாட்டில் ஆகியோர் உழைப்பு என்பது கீழ்நிலைப்படுத்தும் என்று போதித்தார்கள். அகுஸ்து இராயன் ஒருமுறை தனது அரண்மனைப் பிரபு ஒருவர் தனது நண்பருக்குத் தோட்டவேலையில் உதவி செய்ததற்காக அவரைத் தூக்கில் இட்டுக் கொன்றான். இருப்பினும், இயேசுவின் தச்சு வேலையும், கூடாரம் செய்பவராகப் பவுல் செய்த வேலையும் உழைப்பு என்பது “அடிமைத்தனத்தின் அடையாளம்” அல்ல என்று உணரச் செய்து, மக்களை

உழைக்கச் செய்தன. உழைப்பின் மாண்பு மரியாதை பெறத் தொடங்கியது. கிறிஸ்தவர்களல்லாதோர் மத்தியில் கூட இப்பொழுது இக்கருத்து ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இவ்விதமாக கிறிஸ்தவமானது ஒழுக்கம் மற்றும் ஆவிக்குரிய உலகில் மட்டுமின்றி, நடைமுறை உலகிலும் கூடச் செயல் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

## வாழ்க்கையைப் பற்றிய எண்ணப்போக்கு

வேதாகமத்தில் விசுவாசம் கொள்வதில் குறைவுபடும் மக்கள் வாழ்க்கையை நம்பிக்கையின்மையுடன் கண்ணோக்குகின்றார்கள். பெர்ட்ராண்டு ரஸ்ஸல் அவர்களின் எண்ணப் போக்கானது வெறுப்பூட்டுவதாய் இருக்கின்றது:

> நாம் வாழும் இவ்வுலகமானது ஒழுங்கீனம் மற்றும் தற்செயல் ஆகியவற்றின் விளைவு என்று புரிந்து கொள்ளப்பட முடியும்; ஆனால் அது நிதானமான நோக்கத்தின் விளைவாய் இருக்கும் என்றால், அந்த நோக்கம் ஒரு துர்த்தேவதையின் நோக்கமாகவே இருக்க வேண்டும். என்னைப் பொறுத்தமட்டில், விபத்து ஒன்றை நான் மிகவும் வலி குறைந்ததாகவும், அதிகமாக அறிவுக்கேற்ற கருதுகோளாகவும் காணுகின்றேன் (Bertrand Russell, *Why I Am Not a Christian)*.

லூக்ரேஷியஸ் என்ற புகழ் பெற்ற கல்வியாளர், வாழ்க்கை என்பது "இருட்டில் நடைபெறும் நீண்டதொரு போராட்டம்" என்று விவரித்தார் (Lucretius, *On the Nature of Things*). இப்படிப்பட்ட எண்ணப் போக்குகளைப் பகிர்ந்து கொள்ளும் மக்கள், தாங்கள் ஏன் இந்த உலகத்தில் இருக்கின்றார்கள் என்பதை அறியாமல் உள்ளனர். சிலருக்கு தற்கொலையைப் பற்றிய எண்ணமானது சந்தோஷத்தைக் கொடுக்கின்றது. வாழ்க்கையின் நோக்கத்தைப் பொறுத்தமட்டில், அவிசுவாசிகள் வெறுமையான தத்துவங்களை மட்டுமே தர முடியும். அவர்கள் சூரியனைக் கவனிக்கையில், அது வெறுமையான வானத்தில் இருந்து, ஆத்துமாவற்ற பூமிக்கு ஒளியூட்டுவதற்குப் பிரகாசிப்பதாக எண்ணும்படி தனிமையில் விடப்படுகின்றார்கள். நம்பிக்கையற்ற ஒரு இராஜ்யமே அவர்களுடையது ஆகும்.

தேவனை அறிய முடியாதென்ற கருத்தையுடைய தத்துவ ஞானி தம்மிடம் விசாரிப்பவருக்குத் தரும் ஒரே நம்பிக்கை என்னவென்றால், "அறியப்பட முடியாததைப் பற்றிச் சிந்தித்தல்" என்பதேயாகும். இதற்கு மாறாக, விசுவாசிகள் வெளிச்சம் தரும் எண்ணங்களை மகிழ்வுடன் அநுபவித்து, ஆறுதல் மற்றும் அகமகிழ்வு தருகின்ற நோக்கத்தை நிறைவேற்றும் வாழ்வையும் அநுபவிக்கின்றார்கள்.

## மரணத்தைப் பற்றிய எண்ணப்போக்கு

அவிசுவாசிகள் மரணத்தைப் பற்றி மதிப்பிடுகையில் பரிதாபமும்

கவலையும் கொண்டவர்களாகின்றார்கள். லூக்ரேஷியஸ், "தனது துயர் மிக்க இருதயத்தை அடியற்றுப் போகச் செய்யும் குளிர்வான மயக்க மருந்தினால் உணர்வற்றுப் போகும்படி செய்யத் தேடினார்.'' இன்னொருவர் பின்வருமாறு கூறினார்:

> கிறிஸ்துவின் பாதத்தின் முன்பு இன்னமும் பணிந்து கொண்டிருப்பவர்கள் கடந்த காலத்தின் கடுந்துயர் எதையுமே, தனிமையின் கடுந்துயர் எதையுமே மற்றும் வரப்போகும் ஒன்றுமில்லாமையின் பயங்கரம் எதையுமே அறியாதிருக்கின்றார்கள். அவர்கள் தைரியத்துடனும், அமைதியுடனும் தங்கள் வழியே செல்கின்றார்கள். அவர்களுடைய சுடர்விடும் பிரகாசிப்பைப் பெற்றுக்கொள்ள நான் எனது உயிரையும் கொடுப்பேன், ... இந்த விசுவாசத்தைத் தவறவிட்டால் நம்மை நாம் சில விஷயங்களில், சில நம்பிக்கையில், சில மரணமற்ற நிலையில் நிலைநிறுத்த முடியும், ஆனால் அவைகளில் ஒன்றும் இல்லை. எப்போதும் ஒளி வீசும் கிறிஸ்து என்ற ஆளுமையின் புறம்பே எல்லாம் பயங்கரமாகவும் இருள் உள்ளதாகவும் இருக்கின்றன.

வால்ட்டேர், டேவிட் ஹியூம் மற்றும் தாமஸ் பெய்ன் போன்ற அவிசுவாசிகள் தங்கள் மரணப்படுக்கைகளில் செயல்பட்ட விதத்தை "பயங்கரம் நிறைந்தது" என்ற வார்த்தைகளால் மட்டுமே விவரிக்க முடியும். பவுல், யோவான் மற்றும் போலிகார்ப்[1] போன்ற உண்மையுள்ள விசுவாசிகள் தங்களின் கடைசி நாட்களை நெருங்குகையில் அவர்களின் எண்ணங்கள் மகிழ்ச்சி மற்றும் அழகு நிறைந்தவைகளாய் இருந்திருக்க வேண்டும். மரண நேரத்தில் பொன்னைக் காட்டிலும் விலையேறப் பெற்ற செயல்விளைவைக் கிறிஸ்தவம் மட்டுமே தருவதாய் உள்ளது.

## கிறிஸ்தவத்தின் துணை உற்பத்திப் பொருட்கள்

பாவிகளைப் பரிசுத்தவான்களாக்குவதே கிறிஸ்தவத்தின் முக்கிய நோக்கமாய் இருக்கின்றது. இருந்தாலும், அந்த முக்கிய நோக்கமானது பயனுள்ள மற்ற பல துணை உற்பத்திப் பொருட்களுடன் வருகின்றது.

**கல்வி**

கிறிஸ்தவமானது கல்வித் துறையில் மிகப்பெரும் செயல் விளைவைக் கொண்டுள்ளது. 1550க்கும் 1700க்கும் இடைப்பட்ட காலத்தில் ஐரோப்பாவில் தொடங்கப்பட்ட மாபெரும் பல்கலைக் கழகங்கள் இருபதும் வேதாகம விசுவாசிகளாலேயே தொடங்கப் பெற்றன. அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள மாபெரும் பல்கலைக் கழகங்கள் ஒவ்வொன்றும் சமயம் சார்ந்த மனிதர்களாலேயே தொடங்கப் பெற்றன. அவிசுவாசிகள் இதன் பள்ளிகளில் ஊடுருவியிருக்கின்றார்கள் என்பது வருத்தத்திற்குரியதே, ஆனாலும் இந்தப் பள்ளிகளைத் தொடங்கிய கிறிஸ்தவத்தின் செல்வாக்கை அந்த உண்மையானது எவ்வகையிலும்

மதிப்புக் குறையச் செய்வதில்லை. எல்லா நாடுகளின் மத்தியிலும், வேதாகமம் எங்கெல்லாம் போதிக்கப்படுகின்றதோ, அங்கெல்லாம் படித்தவர்களின் விகிதம் மிக உயர்வாக இருக்கின்றது.

**இலக்கியம்**

நல்ல இலக்கியங்களின் மீது வேதாகமத்தின் செல்வாக்கானது, மற்ற எல்லாப் புத்தகங்களும் வேதாகமத்தின் கலவையே ஆகும் என்று கூறத்தக்க விதத்தில் உள்ளது. வேதாகமம் மேம்பட்டது என்று கூறக் காரணங்களாக அதன் நான்கு இலக்கியத் தன்மைகள் அட்டவணைப்படுத்தப்படுகின்றன: பல்வகைத் தன்மை, வல்லமை, உலகளாவிய தன்மை மற்றும் அழகுடைமை. ஆங்கில இலக்கியம் என்ற "திரைச் சீலையின் ஐசுவரியமும் அதி அழகும் மிக்க நூல்களில்'' ''வேதாகமத்தின் செல்வாக்கானது ஒரு தங்க நூலிழையாகவே" பெரும்பாலும் இருக்கின்றது. "வழக்கமாக, இது ஒரு வெறும் அலங்காரப் பொருளாக மட்டுமின்றி, அத்திரைச் சீலையின் வடிவமைப்பு மற்றும் நெசவில் மிக இன்றியமையாத ஒரு பாகமாக உள்ளது, இது நீக்கப்பட்டால், முழுமையும் அழகும் பொலிவும் இழந்து நிற்கும்."

**இசை**

மாபெரும் சங்கீதங்கள் பல, வேதாகமத்தினால் ஏவப்பட்டி ருக்கின்றன. அவைகளில் பின்வருபவைகளும் அடங்குகின்றன: "Fairest Lord Jesus," "Joy to the World," "Hark the Herald Angels Sing," "Oh Love that Will Not Let Me Go," "Tell Me the Old, Old Story," மற்றும் "Were You There When They Crucified My Lord?"

**கலை**

உலகின் மிக அரிய கலைப் பொக்கிஷங்களாகக் கருதப்படுபவற்றில் சில, வேதாகமக் கருத்துக்களின் அடிப்படையில் படைக்கப்பட்டவை களாகும். அவைகளில் மிகவும் புகழ்பெற்றவை: லியர்னோடோ டா வின்ஸியின் "The Last Supper," ரஃபேலின் "The Sistine Madonna," வான் டைக்ஸின் "Christ and the Tribute Money" மற்றும் ரெம்ப்ரான்ட்ஸின் "The Prodigal Son" ஆகியவையாகும்.

## மாற்றம் அடைந்த ஒரு உலகம்

கிறிஸ்தவத்தின் புளித்த மாவு ஊடுருவியிருக்கும் இடங்களில் எல்லாம் ஒழுக்கம் மற்றும் ஆவிக்குரிய உலகமானது மாற்றம் அடைந்திருக்கின்றது என்பது கேள்விக்கு இடமற்ற கருத்தாகும். இது வரை அடைந்துள்ள மாற்றம் யாவும் வேதாகமத்தின் எந்த அற்புதத்தைக் காட்டிலும் பெரியதென்று கருதப்படுகின்றது. "படிப்பறிவற்ற கலிலேயனாகிய" தச்சர் ஒருவர் தேவனுடைய அறிவினால் பூமி முழுவதையும் நிறைப்பதென்பது வெறும் மனிதர் ஒருவர், பெருங்கடல் ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஒப்பானதாகவே இருக்கின்றது. ஜெனோ, பிளேட்டோ, சாக்ரட்டீஸ் மற்றும் பலர்

பணிக்குதவும் போதனையை ஏற்படுத்த வீண் முயற்சி செய்தார்கள். ஆனால் உலகம் முழுவதற்கும் ஒரு புதிய ஜீவனுள்ள மார்க்கத்தைப் போதித்து நிலைநாட்டியவர் இயேசு கிறிஸ்துவே ஆவார்.

பழங்காலத்தவர்களுக்கு இயலாததாக இருந்த ஒன்றை நிறைவேற்றியது, கிறிஸ்தவத்தின் இன்னொரு அற்புதமாகும்: அதாவது, பல்வேறுபட்ட மக்களை ஒரே சமயத்தில் ஒருமைப் படுத்துவதென்பதாகும். செல்ஸஸ் என்பவர், "கிரேக்கர்களும், ஆசியா, ஐரோப்பா மற்றும் லீபியா ஆகிய நாடுகளில் உள்ள காட்டு மிராண்டிகளும் ஒரே சமய அமைப்பின் கீழ் எப்பொழுதாவது இணைக்கப்பட முடியும் என்று கற்பனை செய்வதற்கு, ஒரு மனிதன் மிகவும் பலவீனமுள்ளவனாயிருக்க வேண்டும்" என்று கூறினார்.

கிறிஸ்தவத்தினுடைய செல்வாக்கின் பரந்த தன்மை மற்றும் பல்வகைத் தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளும்போது, மனித விளக்கம் ஒவ்வொன்றும் போதுமானதல்ல என்றாகின்றது. மதநம்பிக்கையற்ற வரலாற்றாளரான எட்வர்ட் கிப்பன், வேறு எந்தக் கல்வியாளரைப் பார்க்கிலும் அதிகமாக கிறிஸ்தவத்தின் வளர்ச்சி பற்றிய முற்றான உண்மைகளை அறிந்திருந்தார். அவர் அந்த வளர்ச்சிக்கு மனித ரீதியான காரணங்களை முன்னிறுத்த நிர்ப்பந்திக்கும்படி உணர்ந்தார். அவர், ஐந்து காரணங்களை அட்டவணைப்படுத்தினார், அவையாவன: வைராக்கியம், எதிர்கால வாழ்விற்கான உபதேசம், நிரூபணமற்ற அற்புத வல்லமை, சுத்தமான ஒழுக்கங்கள் மற்றும் கட்டுப்பாடு. இருப்பினும் இவை ஒவ்வொன்றும் இயேசுவின் வருகைக்கு முன்பும் கூட இருந்தன. இந்த ஐந்து காரணங்களும் கிறிஸ்தவத்தின் தனிச்சிறந்த விரிவாக்கம் மற்றும் செயலாக்கத்திற்குப் போதுமான விளக்கம் தரத் தவறுகின்றன. இயேசுவின் தெய்வீகத்தைத் தவிர்த்து விட்டு, சாத்தியமான ஒவ்வொரு விளக்கத்தையும் தர முயற்சி செய்வதென்பது மதியீனமானதாகவே இருக்கின்றது. அதே வரலாற்றாளர், "ரோம உலகில் மேலோங்கியிருந்த பல்வகையான ஆராதனை முறைமைகள் யாவும் சமமாக உண்மையானவைகளே என்று மக்களால் கருதப்பட்டன; தத்துவவாதியாலோ அவை யாவும் சமமாகவே தவறானவை என்றும், நீதிபதியாலோ அவை யாவும் சமமாகவே பயன் நிறைந்தவை என்று கருதப்பட்டன" என்றும் கூறினார் (Edward Gibbon, *The History of the Decline and Fall of the Roman Empire).*

அவிசுவாசிகள் கிறிஸ்தவத்தைப் பற்றி என்ன கூறிக் கொண்டிருந்தாலும், அன்றாடம் அவர்கள் வேதாகமப் போதனையினால் இவ்வுலகிற்குக் கொண்டு வரப்பட்ட வளமான நன்மைகளை மகிழ்வுடன் அநுபவித்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள். நாத்திகத்தை முன்னுக்குக் கொண்டு வர அவர்கள் போராடுகையில், அவர்கள் தங்களையும் தங்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிக்கும் ஒன்றை அழிப்பதற்கே தங்கள் வல்லமையில் அவ்வாறு செயல்படுகின்றார்கள்.

## *முடிவுரை*

*வேதாகமத்தின் போதனையானது ஏறக்குறைய வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் செயல் விளைவைப் பெற்றுள்ளது. ஏராளமான மைல்கள் மற்றும் வருடங்களைக் கடந்து அது சென்றடையும் பண்பானது வேதாகமத்தை வெறும் மனிதன் மட்டுமே ஏற்படுத்திய புத்தகம் என்பதற்கும் மேலானதாக அடையாளப் படுத்துகின்றது. அதன் செல்வாக்கிற்கான ஆதாரமானது அது தேவனால் ஏவப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.*

---

குறிப்பு

*[1]போலிகார்ப் என்பவர், ஆசியாவில் இருந்த ஏழு சபைகளில் ஒன்றாயிருந்த சிமிர்னாவில் இருந்த ஆதிக் கிறிஸ்தவர்களின் முன்னோடியாயிருந்தார். அவர் அங்கிருந்த சபையின் மூப்பராக இருந்திருக்கலாம். கிறிஸ்தவ வேதசாட்சியாக மரித்த போலிகார்ப்பின் விருவிருப்பான வரலாறு இன்றைக்கான சத்தியம் வெளியிட்ட “வெளிப்படுத்தின விசேஷம் 2” ஆங்கில இதழில் (மார்ச்சு 1999) பக். 34-35ல் கூறப்பட்டுள்ளது.*